**தலைப்பு 290 – கடற்றொழில் மற்றும் நீர் வாழ் வளங்கள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 290 - கடற்றொழில் மற்றும் நீர் வாழ் வளங்கள் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணைக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 நவம்பர் 28 திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பனவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக் கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 2,058.62 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 1,336.20 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 722.42 மில்லியன் அதாவது 35.09 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காணப்படுகின்றது.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டுவருவன | 403.92 | 397.56 | 6.36 | 1.57 |
| மூலதனம் | 1,654.70 | 938.64 | 716.06 | 43.27 |
| **மொத்தம்** | **2.058.62** | **1.336.20** | **722.42** | **35.09** |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் பயன்பாடு**

பல்வேறு செயற்பாடுகளுக்காக திணைக்களத்திற்கு கடற்தொழில் மற்றும் நீர் வாழ் வளங்கள் அமைச்சினால் ரூபா 26.27 மில்லியன் கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதி வரையில் அதில் ரூபா 18.39 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டில் ரூபா 7.88 மில்லியன் அதாவது 30 சதவீத நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 வருமானக் கணக்கு

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம்**

திணைக்களத்தினால் 2016 ஆண்டிற்கான வருமானக் குறியீடு ஒன்றிற்காக ரூபா 25 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது கூட்டுத்தொகை ரூபா 22.8 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அவை மதிப்பீட்டு வருமானத்தில் 91.2 சதவீதமாகும். விபரம் கீழே காணப்படுகின்றது.

| வருமானக் குறியீடு | 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு | | | மதிப்பீட்டு வருமானத்தில் சதவீதமாக பற்றாக்குறை |
|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | பற்றாக்குறை | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 10.03.07.06 | 25.00 | 22.80 | 2.2 | 8.8 |

## 2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்

திணைக்களத்திற்குரிய 29001 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியாகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **செலவினம்** | | **பெறுவனவுகள்** | | **வரவு மீதி** | |
|---|---|---|---|---|---|
| **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளபடி யானது** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளபடி யானது** | **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளபடியான து** |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 22.00 | 21.97 | 15.00 | 19.57 | 105.00 | 76.37 |

## 2.4 பொது வைப்புக் கணக்குகள்

திணைக்களத்தின் கீழுள்ள நான்கு வைப்புக் கணக்குகளுக்குரிய 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 73.88 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **வைப்புக் கணக்கு இலக்கம்** | **2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0013/0064/000 | 68.62 |
| 6000/0000/00/0016/0047/000 | 1.41 |
| 6000/0000/00/0018/0055/000 | 0.05 |
| 6000/0000/00/0006/0073/000 | 3.80 |
| **மொத்தம்** | **73.88** |

## 2.5 கணக்காய்வு அவதானிப்பு

கடற்றொழில் மற்றும் நீர் வாழ் வளங்கள் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழே குறிப்பிடப்படுகின்ற பதிவேடுகள் முறையாக இற்றைப்படுத்தப்பட்டிருக்காமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ஆ) | கணனி, உபபாகங்கள் மற்றும் மென்பொருள் சம்பந்தமான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

### 3.2 வருமானக் கணக்குகள்

திணைக்களத்தின் தலைவர் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற வகையில் 10.03.07.06 கொண்ட வருமானக் குறியீட்டின் கீழ் அனுமதிப்பத்திர கட்டணத்திற்காக வருமான மதிப்பீடு தயாரித்தல், வருமானம் சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகள் சமர்ப்பித்தல், போன்ற பொறுப்புக்கள் சாட்டப்பட்டிருந்தன. இந்த வருானக் குறியீடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்குகளின் படி ரூபா 100,000 கூட்டுத்தொகையான வருமானம் நிலுவையாக இருந்ததுடன் அந்த நிலுவை வருமானம் 01 முதல் 03 வருடங்களுக்கான கால எல்லைக்கு உரித்தானதாகும்.

(ஆ) 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் வருமானக் கணக்குகளின் படி நிலுவை வருமானம் ரூபா 100,000 ஆக காட்டப்பட்டிருந்தாலும் அத்தினத்தில் நிலுவை வருமானம் ரூபா 45,000 ஆகும். அதன்படி ரூபா 55,000 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(இ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டினுள் உயிரற்ற சிப்பிக் கவசப் போக்குவரத்து மற்றும் நீர்வாழ் உயிரினங்களின் நிலத்தடி அடுக்குகளின் ஏற்றுமதி வருமானம் முறையாக ரூபா 871,750 மற்றும் ரூபா 2,395,200 குறைவடைந்துள்ளது அவதானிக்கப்பட்டது. இந்த குறைவு முறையாக 18 சதவீதம் மற்றும் 70 சதவீதமாகும்.

### 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

விடய இலக்கம் 29001 கொண்ட அரசாங்க அலுவலகர்களுக்கான முற்பணக் கணக்கு மீதான 2016 திசெம்பர் 31 ஆந் திகதியின் இணக்கக்கூற்றின் படி அத்தினத்தில் நிலுவை கடன் மீதி ரூபா 918,939 ஆக இருந்ததுடன் அந்த கடன் மீதி 02 வருடங்கள் முதல் 19 வருடங்கள் வரையான காலங்களாக காணப்பட்டதுடன் அவற்றை அறவீடு செய்வதற்காக திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.4 நல்லாளுகையும் கணக்களித்தகைமையும்**

**வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் அந்தத்திட்டம் 2017 ஆகஸ்ட் 01 ஆந் திகதி வரையும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 உள்நாட்டு நிதியளித்தல் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்தல்**

**எரிபொருள் விலை அதிகரிப்பின் காரணமாக மீன்பிடிக் கைத்தொழில்களுக்கு ஏற்பட்டுள்ள பாதகமான தாக்கங்களினை குறைப்பதற்காக மீன்பிடி படகுகளின் உரிமையாளர்களுக்கு எரிபொருள் மானியங்கள் வழங்குவதற்கு பதிலாக மாற்று மானியங்களை வழங்குதல்.**

மேற்கூறப்பட்ட மானியங்களின் கீழ் மீன்பிடி படகுகளின் நுண் பரிசோதனை முறைமை கொள்வனவு செய்தல் மற்றும் நிறுவுதலுக்காக 2015 மற்றும் 2016 ஆம் வருடங்களிலே ரூபா 589.56 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது கீழ் காணப்படும் தகவல்கள் அவதானிக்கப்பட்டது.

(அ) அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 3.1.4 இன் பிரகாரம் உச்ச போட்டித் தன்மையை ஏற்படுத்துவதை உறுதிப்படுத்தும் முகமாக பல்வேறு ஊடகங்களின் ஊடாக பெறுகைகள் விளம்பரங்களை ஏற்படுத்தி சர்வதேச ரீதியாக விளம்பரப்படுத்தப்பட்டதாக கூறப்பட்டாலும் அதன்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டல் 2.14.1 இன் பிரகாரம் இந்த கொள்வனவுக்காக அமைச்சினால் நியமிக்கப்பட்ட பெறுகைகள் குழுவினால் மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும், அப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நுண் பரிசோதனை முறைமைக்கு அவசியமான 3000 Transponder களை 540 நாட்களுக்குள் கொள்வனவு செய்து நிறுவுவதற்காக தனியார் நிறுவனமொன்றுடன் 2014 நவம்பர் 12 ஆந் திகதி ஒப்பந்தமொன்றிற்கு முன்வந்திருந்தாலும், பொருத்தமான வழங்கலுக்கான தெரிவு முறைகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்படவில்லை.

(ஈ) மேற்கூறப்பட்ட ஒப்பந்தம் திருத்தப்பட்டு 1500 Transponder களை 180 நாட்களுக்குள் வழங்கி நிறுவுவதற்காக 2015 பெப்ரவரி 7 ஆந் திகதி மீண்டும் ஒப்பந்தமொன்றிற்கு முன்வந்திருந்தனர். வழங்குனர் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலை மதிப்புக்களை மதிப்பீடு செய்வதற்காக அமைச்சரவையின் பேரம்பேசுதல் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. அதில் யூரோ 80,000 ஆன 2 பொருட்கள் யூரோ 88,000 வரை உயர்த்தப்பட்டிருந்ததுடன் யூரோ 40,000 பெறுமதியான 2 பொருட்கள் நீக்கப்பட்டிருந்தது.

(உ) மென்பொருள் நிறுவுவதற்காக 5 உபதேசக் குழுக்களை பயிற்றுவிப்பதற்காக யூரோ 25,000 2016 ஏப்ரல் 20 ஆந் திகதி வழங்குனருக்கு செலுத்தப்பட்டிருந்தாலும், பயிற்றுவிப்புக்கள் நிகழ்ந்ததற்கான சாட்சி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஊ) படகு நுண் பரிசோதனை கருவி தொகுப்பு படகுக்கு பொருத்தும் போது படகு உரிமையாளர் மற்றும் மாவட்ட உதவி அத்தியட்சகருடன் ஒப்பந்தமொன்றிற்கு செய்யப்பட வேண்டுமெனினும் அந்த ஒப்பந்தத்தின் பிரதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(எ) படகு மேற்பார்வை கருவித்தொகுதி பொருத்துவது சம்பந்தமான தகவல்கள் படகு நுண் பரிசோதனை செயற்திட்டத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமெனினும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில் படகு தொழிற்பாடு இலக்கம் படகு கருவித்தொகுதி பொருத்தப்பட்ட திகதி போன்ற தகவல் எதுவும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) நுண் பரிசோதனை முறைமை தரவுகளை பெற்றுக்கொள்வதற்காக நிறுவனமொன்றை தெரிவு செய்யும்போது அரச பெறுகைகள் நடைமுறைகளை கடைப்பிடிக்காதிருந்ததுடன் 2016 ஆகஸ்ட் ஆகும் போது அந்த நிறுவனத்திற்கு ரூபா 52.17 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

(ஐ) மேற்கூறப்பட்ட செயற்திட்டத்தின் குறிக்கோள்களுக்கிடையே மீன் உற்பத்தியை அதிகரிக்கச்செய்தல் பிரதான குறிக்கோளாக இருந்தும் 2014 ஆம் வருடத்திற்கு நிகராக 2016 ஆம் ஆண்டிலே மீன் உற்பத்தி 2310 மெ.டொ அளவில் வீழ்ச்சியடைந்துள்ளதை அவதானிக்க முடிந்தது.

## 3.6 செயலாற்றல்

2016 ஆம் ஆண்டு வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**போதியளவினதாக நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

மீன் உற்பத்தியை அதிகரிக்கச் செய்தல், பிடிக்கப்படுகின்ற மீன்களின் தரத்தை முன்னேற்றுதல் மற்றும் கடற் தொழில் படகுகள் முறைமையை முன்னேற்றுதல் போன்ற விடயங்களுக்காக 55 அடி நீளமான பல்தின கடற்தொழில் படகொன்று உற்பத்தி செய்தல் சம்பந்மதமாக கீழ்வருவன அவதானிக்கப்பட்டது.

- வள்ளத்தின் அச்சொன்றை புதிதாக உற்பத்தி செய்து அந்த அச்சின் மூலம் வள்ளம் தயாரிப்பதற்காக முறையாக ரூபா 22 மில்லியன் மற்றும் ரூபா 26 மில்லியன் சீனோர் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தாலும் வள்ளம் உற்பத்திக்காக பழைய அச்சொன்று பாவிக்கப்பட்டுள்ளதாக 2016 செப்தெம்பர் 21 ஆந் திகதியுடைய கடற்படை உதவி பொறியியலாளரின் மேற்பார்வை அறிக்கையின் படி குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், அதற்காக செலுத்தப்பட்ட பணத்தை மீளப் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன்படி ரூபா 22 மில்லியன் செலவு பணியின்றி செலவாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) கடற்தொழில் திணைக்களத்தின் நடவடிக்கைகளுக்காக கட்டிட நிர்மாண செலவு விடயத்தின் கீழ் ரூபா 19,140,181 செலவு இடம்பெற்றிருந்தது. அது சம்பந்தமான அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- மேற்கூறிய செலவு விடயத்தின் கீழ் ரூபா 5,653,539 நிதிஏற்பாடு மாவட்ட செயலாளர் காரியாலயம் 4 இற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 3,645,457 செலவு செய்யப்பட்டிருந்தது. அந்த செலவினங்களுக்கு உரித்தான பௌதீக முன்னேற்றம் மற்றும் செயலாற்றல் அறிக்கை என்பனவற்றை பெற்றுக்கொள்வதற்கோ உரித்தான மாவட்ட கடற்தொழில் காரியாலயத்தின் ஊடாக மேற்பார்வை செய்வதற்கோ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

- தங்கல்லை வாஸஸ்தலத்தை புனர் நிர்மாணம் செய்வதற்காக ரூபா 1,722,332 நிதிஏற்பாடு 2016 திசெம்பர் 29 ஆந் திகதி ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலாளருக்கு பெற்றுக்கொடுக்கப்பட்ட போதும் அந்த நிதிஏற்பாடு வருட இறுதியில் வழங்கப்பட்டதன் காரணமாக நிதிஏற்பாட்டை உபயோகப்படுத்திக் கொள்வதற்கு முடியாமல் போயிருந்தது.

**3.7 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

மீன் உற்பத்தியை அதிகரிக்கச் செய்தல் மற்றும் பிடிக்கப்படுகின்ற மீன்களின் தரத்தை உயர்த்துதல் என்பதன் அடிப்படையில் கடற்தொழில் படகு முறைமை தரம் உயர்த்தலின் கீழ் மிகவும் திறமையான 10 வள்ளங்களை தயாரித்தல் சம்பந்தமாக கீழ்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) வள்ளத்தை பெற்றுக்கொள்ளும் நலனாளிகள் மூலம் சீனோர் நிறுவன்தினால் தயாரிக்கப்படுகின்ற வள்ளத்தை பெற்றுக்கொள்வதற்கு நிராகரிக்கின்ற காரணத்தினால் அவர்களால் பெயர் குறிப்பிடப்படுகின்ற நிறுவனத்தினால் தயாரிப்பதற்கு பெறுகைகள் சபை மூலம் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்காக எந்த அனுமதியினையும் பெற்றிருக்கவில்லை என்பதுடன் அது மேற்கூறிய விடயத்திற்காக அனுமதியை வழங்கிய அமைச்சரவை தீர்மானத்திற்கு முரணான விடயமாக அவதானிக்கப்பட்டது.

(ii) 2016 ஒக்தோபர் 29 ஆந் திகதி வழங்கிய வள்ள நலனாளிகளின் பட்டியலின் படி வள்ளத்தை தயாரிக்கும் நிறுவனமும் நலனாளியாக சேர்க்கப்பட்டிருப்பது சர்ச்சைக்குரிய விடயமாகக் காணப்படுகின்றது.

(iii) 5 வள்ளங்களை மட்டும் தயாரிப்பதற்கு கட்டளை வழங்கப்பட்டிருந்த போது 10 வள்ளங்களுக்கான முழு பெறுமதியான ரூபா 149.5 மில்லியன் வரையறுக்கப்பட்ட சீனோர் நிறுவனத்திற்கு 2016 திசெம்பர் மாதத்தில் செலுத்தப்பட்டிருந்தது.

**3.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

(அ) அச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 4.3 இன் பிரகாரம் பெறுகை ஒன்றிற்காக முழு செலவு மதிப்பீடொன்று தயாரிக்கப்பட வேண்டுமெனினும் ரூபா 2.84 மில்லியன் பெறுமதியான ரேடியோ உபகரணங்கள் கொள்வனவு செய்தல் சம்பந்தமாக முழு செலவு மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இது சம்பந்தமாக கீழுள்ள விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மேற்கூறிய கொள்வனவிற்காக நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு பரிந்துரை இல 3-iii இன் அறிவுரை பிரகாரம் ரேடியோ உபகரணங்கள் சம்பந்தமாக அதி விஷேட அறிவை உடைய சபையின் பரிந்துரையின் படி கொள்வனவு செய்யும் படி அறிவுரைகள் வழங்கப்பட்டிருந்தும் அதன்படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) விலைமனுகோரலின் போது மாற்று விலைமனு சமர்ப்பிப்பதற்காக நிதிஏற்பாடு செய்யப்படாததன் காரணமாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு பரிந்துரை செய்தபடி ஒரு உபகரணம் ரூபா 890,000 வீதம் கொள்வனவு செய்யும் ஆற்றல் கை நழுவியிருந்தது.

(iii) மேற்கூறிய கொள்வனவிற்காக நியமிக்கப்பட்ட விலைமனு திறக்கும் குழுவிற்கு ரேடியோ உபகரணங்கள் கொள்வனவிற்கு விண்ணப்பித்திருந்த அதிகாரியும் நியமிக்கப்பட்டிருந்ததால் பெறுகைகளில் பக்கச்சார்பு நிலவியதாக பாதிப்பு ஏற்பட்டிருந்தது.

(ஆ) பல்தின கடற்றொழில் படகுகளை புனர்நிர்மாணம் செய்வதற்கான நிவாரணங்களை பெற்றுக்கொடுத்தலின் கீழ் 2016 ஆம் ஆண்டிலே ரூபா 74.22 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அது சம்பந்தமாக கீழ்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(i) பல்தின கடற்றொழில் படகு நிவாரண பயனாளிகளை தெரிவு செய்வதில் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய ஒரு முறையான திட்டம் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) புனர்நிர்மாணத்திற்காக நிறுவனத்தை தெரிவு செய்வதில் பெறுகைகள் வழிகாட்டிகள் பின்பற்றப்படாதிருந்ததுடன் நிவாரண பயனாளிகளினாலேயே அவர்களின் விருப்பத்திற்கமைய வள்ளம் புனர்நிர்மாணத்திற்கான நிறுவனம் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

### 3.9 நோக்கத்திற்கு முரணான முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 ஆம் ஆண்டிலே கடற்றொழில் மற்றும் நீர் வாழ் வளங்கள் திணைக்களத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சிறிய மற்றும் நடுத்தர அளவு கடற்றொழில் தொழிற்சாலைக்காக நவீன தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்யும் விடயத்திற்காக வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் ஒதுக்கக்கூடிய நிதி ஏற்பாட்டின் மூலம் ரூபா 110.71 மில்லியன் இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்திற்கும் ரூபா 32.5 மில்லியன் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்திற்குமாக ரூபா 143.21 மில்லியன் மீளாய்வாண்டில் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

(ஆ) இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்திற்கு பெற்றுக்கொடுக்கப்பட்ட நிதியில் ரூபா 5.99 மில்லியன் பெறுமதியான 2 ட்ரெக்டர் உம் ரூபா 8.60 மில்லியன் பெறுமதியான 4 பாலம் தராசும் ரூபா 74.13 மில்லியன் பெறுமதியான 1 க்ரேன் உம் மற்றும் ரூபா 21.89 மில்லியன் பெறுமதியான 08 எரிபொருள் குழாயும் கொள்வனவு செய்யப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தாலும், கொள்வனவு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு குறிப்பிடப்பட்ட பொருட்கள் பெறப்பட்டதற்கான தகவல்கள் 2017 ஆகஸ்ட் மாதமாகியும் கிடைக்கப்பெறவில்லை.

(இ) இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட நிதி கீழ் குறிப்பிடப்படும் காரியங்களுக்காக செலவு செய்யப்படவேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது.

| | **பெறுமதி**<br>**ரூபா.மில்லியன்** |
|---|---|
| • 2015 ஆம் ஆண்டில் புதிய 11 நிர்வாகிகளை நிர்மாணித்தல் மற்றும் அதற்கு அவசியமான உபகரணங்களை கொள்வனவு செய்யும் செலவை நிரப்புவதற்காக | 13.00 |
| • கண்டி நிர்வாகியின் கீழ் மெகா மீன் விற்பனை நிலையமொன்றை நிர்மாணித்தல் | 5.00 |

- காலி மோதரை ஐஸ் ஆலைக்கு 2 போக் லிப்ட் இயந்திரங்களை கொள்வனவு செய்தல் 10.00
- பிரதேச மத்திய விற்பனை நிலையத்திற்காக 75 மின்னணு கணனிகள் கொள்வனவு செய்தல் 4.50

(ஈ) கடற்றொழில் தொழிற்சாலைக்காக நவீன தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்வதற்காக கடற்றொழில் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டிலிருந்து மேலுள்ள நிறுவனங்களுக்கு அவசியமான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்வது நோக்கத்திற்கு முரணான முறையற்ற கொடுக்கல் வாங்கல்களாக அவதானிக்கப்பட்டன.

### 3.10 நட்டமும் சேதமும்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

பெறுமதி குறிக்கப்படாத 13 வாகன விபத்துக்கள் மற்றும் வேறு 2 சேதங்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 104 இல் இருந்து 109 வரையுள்ள நடைமுறையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.11 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 48 | 41 | 07 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 21 | 12 | 09 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 961 | 484 | 477 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 107 | 92 | 15 | - |
| (v) | ஏனைய(அமைய/ தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | - | 01 | - | 01 |
| | **மொத்தம்** | **1137** | **630** | **508** | **01** |